# 3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

இந்து சமுத்திரத்தின் மத்தியில் வளமும் அழகும் கொண்ட தீவான இலங்கை தொடர்ந்தும் வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்த்து வந்தது. அந்த அடிப்படையில் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அதிகளவில் கீழைத்தேசத்தவர்களும் 16 ஆம் நூற்றாண்டின் பின்னர் மேலைத் தேசத்தவர்களும் இலங்கைமீது தமது கவனத்தைச் செலுத்தினர். ஐரோப்பியர் கீழைத்தேசத்திற்கு வருவதற்கான காரணங்கள், இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரின் நடவடிக்கைகள், அவர்கள் இலங்கையை விட்டுச் சென்ற பின்னரும் இன்றைய சமூகத்தில் காணப்படும் போர்த்துகேயரின் செல்வாக்குகள் என்பனபற்றி இவ்வத்தியாயத்தில் இருந்து கற்போம்.

## கீழைத்தேசத்திற்கு வருகைதந்த ஐரோப்பியர்

| தாய் நாடு | இனம் | கீழைத்தேச மத்திய நிலையம் |
|---|---|---|
| போர்த்துக்கல் | போர்த்துக்கேயர் | கோவா |
| ஒல்லாந்து | ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) | பத்தேவியா |
| பிரான்ஸ் | பிரான்ஸியர் | பாண்டிச்சேரி |
| பிரித்தானியா | ஆங்கிலேயர் | கல்கத்தா / சென்னை / பம்பாய் |

ஆதிகாலந்தொட்டு முஸ்லிம் வியாபாரிகள் கீழைத்தேயத்தில் இருந்து பல்வேறு வர்த்தகப் பொருட்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றனர். இந்த வர்த்தகப் பொருட்களை முஸ்லிம் வியாபாரிகளிடமிருந்து ஐரோப்பியர் பெற்றுக் கொண்டனரேயன்றி கீழை நாடுகளுக்கு வந்து அவற்றைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. முஸ்லீம்களால் கொண்டுவரப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட மத்திய நிலையம் கொன்ஸ்தாந்திநோபிள் நகராகும்.

| பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட நாடுகள் | பெற்றுக்கொண்ட வர்த்தகப் பொருட்கள் |
|---|---|
| தென்கிழக்காசியா | ஏலம், கராம்பு, சாதிக்காய் |
| இந்தியா | மிளகு, இஞ்சி, அபின், துணி, அரிசி,வைரம், தோல், பருத்தி |
| சீனா | பட்டுத்துணி, தங்கம், தேயிலை, கஸ்தூரி, பீங்கான், வெள்ளி |
| ஜப்பான் | வெள்ளி |
| இலங்கை | கறுவா, பாக்கு, முத்து, மாணிக்கம், யானை, யானைத்தந்தம் |

## ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தந்தமைக்கான காரணங்கள்

- கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிய சிலுவை யுத்தம் முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்து 1453ஆம் ஆண்டு முடிவுற்றது. அப்போது கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றிக் கொண்ட துருக்கிய முஸ்லிம்கள் ஐரோப்பியர் வர்த்தகப் பொருட்களைப் பெறுவதில் பல தடைகளையும் விதித்தனர். அதன்படி வர்த்தகப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதன் மூலம் அதிக இலாபமீட்டுதல், உரிய காலத்துக்கு வர்த்தகப் பொருட்களை வழங்காதிருத்தல், அதிக வரி அறவிடுதல் முதலான முஸ்லிம்களின் செயற்பாடுகள் ஐரோப்பியரை சிரமத்துக்குள்ளாக்கின. இதனால் நேரடியாகச் சென்று வர்த்தகப் பொருட்களைப் பெற அவர்கள் விரும்பினர்.

- கீழைத்தேச வர்த்தகம் மூலம் கிடைத்த பொருளாதார பலமே ஓட்டோமன் துருக்கியரைச் சிலுவை யுத்தங்களில் வெற்றி கொள்ளச் செய்தது என்பதை உணர்ந்த போர்த்துக்கேயர், கீழைத்தேசங்களுக்குச் சென்று முஸ்லிம்களின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாமல் செய்துவிடத் தீர்மானித்தனர். அது மாத்திரமன்றி கீழைத்தேச வர்த்தக ஏக போக உரிமையைத் தம் வசமாக்கிக் கொள்வதும் அவர்களது எதிர்பார்ப்பாக இருந்தது.


## போர்த்துக்கேயரது கீழைத்தேச நாடுகளுக்கான வருகை

15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கல் மன்னனான ஜோன் ஆபிரிக்காவைச் சுற்றிப் பயணம் செய்து இந்தியாவை அடைவதற்கான கடற்பாதை ஒன்றைக் கண்டு பிடித்தால் முஸ்லிம்களிடம் இருக்கும் வர்த்தக உரிமையைக் கைப்பற்றலாம் என்பதை அறிந்திருந்தான். தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாட்டு மக்களை ஊக்கப்படுத்தியதுடன், கடற்பயணங்களுக்கான உதவிகளையும் இம்மன்னன் வழங்கினான். போர்த்துக்கல் கடற்கரையோர நாடானபடியால் மக்கள் பயமின்றி கடற் பயணம் செய்வதற்கு முன்வந்தனர். அடுத்து ஆட்சிக்கு வந்த ஹென்றி மன்னனும், தொடர்ந்தும் கடற் பயணங்களுக்கு மக்களை ஆர்வமூட்டினான்.



வஸ்கொடகாமா

- 1488ஆம் ஆண்டு பார்த்தலோமியஸ் டயஸ் எனும் மாலுமி அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக தென்ஆபிரிக்காவின் புயல் முனையை அடைந்தான்.
- 1497ஆம் ஆண்டு வஸ்கொடகாமா தனது கீழைத்தேசப் பயணத்தை ஆரம்பித்தான். இவன் பார்த்தலோமியஸ் டயஸின் கடற் பாதையில் பயணம் செய்து புயல் (நன்நம்பிக்கை) முனையைக் கடந்து இந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைந்தான்.
- 1498 மே 20 இல் கள்ளிக்கோட்டையில் இறங்கிய வஸ்கொடகாமா ‘‘நாங்கள் வாசனைத் திரவியங்களையும், கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம்’’ என்று கூறினான்.



வாஸ்கொடகாமாவின் கீழைத்தேயப் பயணப்பாதை

வஸ்கொடகாமா பெரும் செல்வத்துடன் திரும்பியதைக் கண்ட போர்த்துக்கல் மன்னன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். இந்தியாவுடன் வர்த்தகம் செய்து இலாப மீட்டுவது மன்னனின் நோக்கமாய் அமைந்தது. எனவே இந்தியாவின் கரையோரத்தில் களஞ்சியசாலையையும், கோட்டைகளையும் அமைப்பதற்கும் மன்னன் தீர்மானித்தான். எனவே அதற்காகப் பல கப்பல்கள் கொண்ட ஒரு பாரிய குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான்.

- 1500ஆம் ஆண்டு பேதுரு அல்வாஸ் கப்ரால் என்பவனின் தலைமையிலான பாரிய கப்பற் குழு இந்தியாவை அடைந்ததைத் தொடர்ந்து மலபார், கொச்சின் ஆட்சியாளர்களின் அனுமதியுடன் அப்பிரதேசங்களில் கோட்டைகளை அமைத்தனர்.

- 1505 மார்ச் 24 இல் டொன் பிரான்சிஸ்கோ த அல்மேடா எனும் போர்த்துக்கேயத் தளபதி இந்தியாவுக்கு வந்தான். அவன் மலபார் கரையோரத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் வியாபாரிகளைத் துரத்திவிட்டு இந்த வர்த்தகத்தைக் கைப்பற்றினான். இக்காலகட்டத்தில் இந்து சமுத்திர வர்த்தக உரிமை முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தது. அவர்கள் மலாக்காவிலிருந்து வாசனைத் திரவியங்களைப் பெற்று மாலைதீவுகள், ஏடன், பாரசீகம் ஊடாக கொன்ஸ்தாந்திநோபிளுக்குக் கொண்டு சென்று வர்த்தகம் செய்து பெரும் இலாபம் ஈட்டினர். பிரான்ஸிஸ்கோ த அல்மேடா இந்து சமுத்திர வர்த்தக உரிமையைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தனது மகனான லோரன்ஸோ த அல்மேடா தலைமையில் ஒரு

கப்பற்படையை மாலைத்தீவுப் பக்கமாக அனுப்பி வைத்தான். அக்கப்பற்படை ஒரு புயலில் அகப்பட்டு வேறு திசைக்கு அடித்துச் செல்லப்பட்டு இலங்கையின் காலித் துறைமுகத்தை அடைந்தது.


போர்த்துக்கேயக் கப்பலொன்று

- 1507 இல் கீழைத்தேசத்திற்கான நிர்வாகியாக வருகை தந்த அல்பகூர்க் என்பவன் ஓமஸ், மலாக்கா, சொகோத்திரா என்பவற்றைக் கைப்பற்றி இந்து சமுத்திர வர்த்தக உரிமையை உறுதிப்படுத்தினான். 1510 இல் இந்திய மேற்குக் கரையிலமைந்துள்ள கோவாவைக் கைப்பற்றி அதனைத் தமது கீழைத்தேச வர்த்தக மத்திய நிலையமாக்கிக் கொண்டான்.
- 1498ஆம் ஆண்டு முதற் தடவையாக இந்தியாவுக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் 1510ஆம் ஆண்டளவில் இந்தியக் கரையோரத்தினதும், இந்து சமுத்திரத்தினதும் வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொண்டனர்.

**செயற்பாடு**

1. இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகள் ஐந்தின் பெயர்களை எழுதுக.
2. இந்து சமுத்திரத்திலுள்ள முக்கிய துறைமுகங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.


இலவச விநியோகத்திற்காக

# போர்த்துகேயரின் இலங்கை வருகையும் இலங்கையில் நிலவிய அரசியல் பின்னணியும்

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைவரும் போது இலங்கை மூன்று இராச்சியங்களாகப் பிரிந்து காணப்பட்டது.


1. கோட்டை
2. கண்டி
3. யாழ்ப்பாணம்

இவை தவிர வட, மத்திய கிழக்குப் பகுதிகளில் பிரதேசத் தலைவர்களின் கீழ் வன்னி அரசும் காணப்பட்டது.


## கோட்டை இராசதானி

கம்பளை யுகத்தில் அழகக்கோனார் எனும் சேனாதிபதியால் ஸ்ரீஜயவர்த்தனபுர தியவன்னா எனுமிடத்தில் கோட்டை நிர்மாணிக்கப்பட்டது. இது கொலன்னா ஓய, தியவண்ணா ஓய எனும் ஆறுகளால் சூழப்பட்ட அழகு நகராகத் திகழ்ந்தது. உணவில் தன்னிறைவு உடைய பொருளாதாரத்தில் செல்வம் நிறைந்த இராச்சியமாகக் கோட்டை இராசதானி விளங்கியது.

கோட்டை இராசதானி பரப்பளவில் பெரிதாக விளங்கியதுடன், பலம் வாய்ந்த அரசாகவும் விளங்கியது. அத்தோடு இதன் அரசன் இலங்கையின் முக்கிய ஆட்சியாளனாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டான். 'லங்காதீஸ்வர', 'சக்கரவர்த்தி' எனும் அடை மொழிகளால் இவர்கள் அழைக்கப்பட்டனர். ஏனைய அரசர்கள் கோட்டை அரசனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வந்து அவனைச் சந்திப்பது மரபாக இருந்தது. 16ஆம் நூற்றாண்டளவில் இந்த முறைகள் படிப்படியே வீழ்ச்சியடைந்தது.





கோட்டை இராசதானி




16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை

***கோட்டை இராசதானியின் எல்லைகள்***

- வடக்கே - மல்வத்து ஓய
- தெற்கே - வளவ கங்கை
- மேற்கே - இந்து சமுத்திரம்
- கிழக்கே - மத்தியமலைநாட்டின் மேற்குச் சாய்வு




போர்த்துகேயர் இலங்கை வரும் போது 8ஆம் வீரபராக்கிரமபாகு கோட்டை அரசனாகத் திகழ்ந்தான்.

## கண்டி இராச்சியம்

கண்டி இராச்சியத்தின் மன்னனாக சேனா சம்மத விக்கிரமபாகு இருந்தான்.

## யாழ்ப்பாண இராச்சியம்

இலங்கையின் வடபகுதியும் யாழ்குடாவுக்கு அண்மையிலிருந்த தீவுக் கூட்டங்களும் இவ்விராச்சியத்துக்குரியவையாகும். 14ஆம் நூற்றாண்டு முதல் ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்தோர் இங்கு ஆட்சியாளராகத் திகழ்ந்தனர்.

போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது பரராஜசேகரம் யாழ்ப்பாண மன்னனாகத் திகழ்ந்தான்.

## வன்னி ஆட்சிப் பிரதேசம்

வட மத்தியிலும், கிழக்கிலும் பரவலடைந்திருந்த சிறிய ஆட்சி அலகுகளைக் கொண்டதாக வன்னி நிர்வாகப் பிரதேசம் காணப்பட்டது. இப்பிரதேசத்தை ஆட்சி செய்தவர்கள் "வன்னியர்கள்" எனப்பட்டனர்.

### செயற்பாடுகள்

1. கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கீழைத்தேசத்துக்கு வருகை தந்த ஐரோப்பிய நாட்டவரின் நாடுகள் | தலைநகர் | கீழைத்தேச தலைமை நிலையம். |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

2. மேற்கூறப்பட்ட இடங்களை உலகப் புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.
3. கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது காணப்பட்ட பிரதான இராச்சியங்கள் | ஆட்சியாளர் | இராச்சியத்துக்குரிய பகுதிகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |


இலவச விநியோகத்திற்காக

4. இலங்கைப் புறவுருவப் படத்தில் கீழ்வரும் இடங்களையும், நதிகளையும் குறித்துப் பெயரிடுக.

1. கோட்டை நகரம்
2. கண்டி நகரம்
3. தம்மன் கடுவ
4. கொட்டியாரம்
5. யால
6. பாணம
7. யாழ்ப்பாணம்
8. களனி கங்கை
9. வளவ கங்கை
10. மல்வத்து ஓயா
11. கும்புக்கன் ஓயா
12. கல்லோயா
13. மகாவலி கங்கை

## போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்டல்

எதிர்பாராத விதமாகக் காலித்துறைமுகத்தை அடைந்த லோரன்சோ த அல்மேடா தான் கால் பதித்திருப்பது இலங்கைத்தீவில் என்பதையறிந்து அளவிலா மகிழ்ச்சியடைந்தான். இலங்கை என்பது கறுவா, மிளகு, முத்து, மாணிக்கம் என்பவற்றை அதிகமாகக் கொண்ட நாடு என்று போர்த்துக்கேயர் ஏற்கனவே அறிந்திருந்தனர். எனவே இலங்கை அரசனைக் கண்டு தமக்கு வேண்டிய வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் லோரன்ஸோ தஅல்மேடா 1505இல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தான். போர்த்துக்கேயரின் வருகையை அறிந்த முஸ்லிம் வர்த்தகர்கள் அவர்களைத் தாக்கி விரட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் போர்த்துக்கேயர் கப்பல்களில் இருந்த பீரங்கிகளால் தாக்கி முஸ்லிம்களைப் பின்னடையச் செய்தனர். இதுவரை வெடிச்சத்தம் கேட்டிராத சிங்களவர்கள் பீதியடைந்தவர்களாக அரசனிடம் போய் முறையிட்டனர்.

கொழும்பு துறைமுகத்திற்கு மிகவும் வெள்ளையான மனிதர்கள் வந்துள்ளனர். இரும்புச் சட்டையும், இரும்புத் தொப்பியும் அணிந்த அவர்கள் ஓரிடத்தில் நில்லாமல் அங்கும் இங்கும் அலைகின்றனர். வெண்ணிறக் கல்லைச் சாப்பிடுவதுடன், இரத்தத்தையும் குடிக்கின்றனர். அவர்களுடைய துப்பாக்கிகள் மிகத் தொலை தூரம் வரை சென்று மலையைக் கூட தூளாக்குகின்றது.

**ராஜாவலிய**

தன்னைச் சந்திக்க வருமாறு கோட்டை மன்னன் போர்த்துக்கேயருக்குச் செய்தி அனுப்பினான். அதனை ஏற்றுக் கொண்ட லோரன்ஸோ த அல்மேடா தனது பிரதிநிதி ஒருவனை அரண்மனைக்கு அனுப்புவதற்கு ஆயத்தமானான்.

அப்பிரதிநிதிக்கு வழிகாட்டிகளாகச் சென்ற சிங்களவர்கள் மூன்று நாட்களாக அவனை அலைக்கழித்து அரண்மனையை அடைந்தனர். கோட்டை அரண்மனையிலிருக்கும் போது தமது கப்பலின் பீரங்கி ஓசையைக் கேட்ட அப்பிரதிநிதி கொழும்புத் துறைமுகத்திற்கும், கோட்டைக்கும் இடையே மிகக் குறுகிய தூரமே உள்ளது என்பதை உணர்ந்து கொண்டான். ''பறங்கியன் கோட்டை போனது போல'' என்ற உவமைத் தொடர் இதனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தனது பிரதிநிதியை அன்புடன் அரசன் வரவேற்று உபசரித்ததை அறிந்த லோரன்ஸோ த அல்மேடா மிகவும் மகிழ்ந்து ஒரு வர்த்தக உடன்படிக்கையை செய்து கொள்வதற்காக இன்னுமொரு பிரதிநிதியை மன்னனிடம் அனுப்பி வைத்தான். மன்னனுக்கும் பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் முடிவில் போர்த்துக்கேயருக்கும் மன்னனுக்குமிடையில் முதலாவது ஒப்பந்தம் கைச்சாத்தானது.


போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரத்தைப் பாதுகாப்பதாகவும், அதற்கு மன்னன் 400 பஹார் கறுவாவை ஆண்டு தோறும் வழங்குவதாகவும் இணக்கமாயினர்.



போர்த்துக்கேய நினைவுச்சின்னம்

அரசனின் அனுமதியுடன் லோரன்ஸோ த அல்மேடா வர்த்தகக் களஞ்சியசாலை ஒன்றையும் தேவாலயம் ஒன்றையும் அமைத்தான். தனது இலங்கைப் பயணத்தை நினைவு கூரும் முகமாக போர்த்துக்கேய அரச இலச்சினையையும் செதுக்கினான்.

போர்த்துகேயர் பண்டகசாலை கட்டியதில் அதிருப்தியுற்ற முஸ்லிம்கள் சிங்களவர்களையும் சேர்த்துக் கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். எனவே தமது பண்டகசாலையை மூடிவிட்டுப் போர்த்துக்கேயர் இந்தியா திரும்பினர். ஆயினும் கறுவா கொள்வனவிற்காக அடிக்கடி இலங்கைக்கு வந்தனர்.



கொழும்புக் கோட்டை

எட்டாம் (வீர) பராக்கிரமபாகு மன்னனின் மறைவுக்குப் பின்னர் ஒன்பதாம் (தர்ம)பராக்கிரமபாகு கோட்டை மன்னனானான். கி.பி 1518 இல் லோபேஸ் சொரஸ்த அல்பகேரியா எனும் தளபதியின் கீழ் பலம் வாய்ந்த கப்பற்படையொன்று கொழும்பை அடைந்தது. இம்முறையும் முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து அவர்களைத் தாக்கினர். எனினும் போர்த்துக்கேயரின் பீரங்கித் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாது பின்வாங்கினர். பின்னர் போர்த்துக்கேயர் கொழும்புத் துறைமுகத்திற்கு அண்மையில் ஒரு கோட்டையை அமைத்தனர்.

போர்த்துக்கேயரின் கோட்டை நிர்மாணத்தைக் கண்டு கலவரமடைந்த சிங்கள மக்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து அக்கோட்டையை உடைத்தனர். இச்சம்பவத்தைப் போர்த்துக்கேயர் மன்னனிடம் முறையிட்ட போதும் அவனால் அதற்குத் தீர்வுகாண முடியவில்லை.

கி.பி 1519 இல் ஆட்சிபீடமேறிய ஆறாம் விஜபாகு மன்னன் போர்த்துகேயருக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்தான்.


முஸ்லிம்களின் உதவியுடன் மன்னன் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டான். 1521ல் போர்த்துக்கேயர் மீண்டும் கோட்டையைக் கட்டினர். மன்னன் இதனைப் பகிரங்கமாக எதிர்த்தான். முஸ்லிம் படையுடன் சேர்ந்து சிங்கள மக்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக தாக்குதலை மேற்கொண்ட போதிலும் அது தோல்வியில் முடிந்தது.

## விஜயபாகு கொள்ளை கி.பி 1521

6ஆம் விஜயபாகு மன்னனுக்கு முதல் திருமணத்தின் மூலம் புவனேகபாகு, றைகம் பண்டார, மாயாதுன்னை எனும் மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவன் இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்ட கீரவெல்ல எனும் பெண்ணுக்கு அவளின் முதல் திருமணத்தின் மூலம் தேவராஜ எனும் மகன் இருந்தான். தனது இரண்டாவது மனைவியின் வேண்டுகோளின்படி தேவராஜாவுக்கு அரசுரிமையை வழங்கத் தம் தந்தை தயாராகுகிறார் என்பதை அறிந்த அரசகுமாரர் மூவரும் தந்தையை அரச மாளிகையில் வைத்தே கொலை செய்தனர். கி.பி 1521இல் நடைபெற்ற இச்சம்பவம் வரலாற்றில் ‘‘விஜயபாகு கொள்ளை’’ என வர்ணிக்கப்படுகிறது.

அதன்பின்னர் கோட்டை இராச்சியம் றைகம, சீதாவாக்கை, கோட்டை என மூன்றாகப் பிளவுபட்டது. கோட்டை புவனேகபாகுவிற்கும், சீதாவாக்கை மாயாதுன்னைக்கும், றைகம றைகம் பண்டாரவிற்கும் உரியதாயின.

கோட்டை மன்னன், மாயதுன்னை மீது சந்தேகத்துடனேயே இருந்தான். சீதாவாக்கை இராச்சியத்துடன் மாயதுன்னை திருப்தியடையமாட்டான் எனப் புவனேகபாகு அறிந்திருந்தான். தன் சகோதரன் சிறந்த வீரன் என்பதை அறிந்திருந்த புவனேகபாகு, போர்த்துக்கேயரின் உதவியை நாடி நின்றான். கோட்டை இராச்சியம் பிளவுபட்டமை அதன் பலவீனத்திற்கு வழிவகுத்தது. இது கோட்டை அரசில் போர்த்துக்கேயர் தலையிடுவதற்கும், இறுதியாகப் போர்த்துக்கேயர் வசம் கோட்டை இராசதானி வருவதற்கும் காரணமாக அமைந்தது.




சீதாவாக்கையின் எழுச்சி

1527 முதல் 1537 வரை பத்து வருடகாலமாக மாயதுன்ன மன்னன் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன. அச்சந்தர்ப்பங்களில் எல்லாம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடவேண்டி ஏற்பட்டது. இது கோட்டை இராச்சியத்துக்குள் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை மேலும் மேலும் உறுதிப்படுத்திக்கொள்ள வாய்ப்பாயிற்று. 1537 முதல் 1547 வரை கோட்டை, சீதாவாக்கை இராச்சியங்களிடையே சமாதான நிலமை காணப்பட்டது.

**கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றும் பொருட்டு மன்னன் மாயதுன்னை மேற்கொண்ட முயற்சிகள்**

| ஆண்டு | கோட்டை அரசன் | உதவி பெறப்பட்டவர் | மாயாதுன்னை மன்னன் | பெறப்பட்ட உதவி | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| கி.பி 1528 | 7ஆம் புவனேகபாகு | கோவை இராசப் பிரதிநிதி | கோட்டையைத் தாக்குதல் | கள்ளிக் கோட்டை சமோரின் மாயாதுன்னையின் வேண்டு கோளின்படி கொழும்புக் கோட்டையைத் தாக்குதல். | மாயாதுன்னை தோல்வியுறல் |
| கி.பி 1537 | 7ஆம் புவனேகபாகு | கப்பித்தான் ஜெனரல் அபோன்சோ த சூசா | கோட்டையைத் தாக்குதல் | மாயாதுன்னையின் உதவிக்கு வந்த சமோரினின் கடற்படை தோல்வியுறல் | மாயதுன்னை புவனேபாகுவுடன் சமாதானம் செய்து கொள்ளல் |
| கி.பி 1539 | 7ஆம் புவனேகபாகு | மிகேல் பெரேரா | கோட்டையைத் தாக்குதல் | மாயதுன்னையின் உதவிக்கு வரல் | மிகேல் பெரேரா சமோரின் படைவீரரைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டு விடுத்த வேண்டு கோளுக்கு மாயதுன்னை இணங்குதல். இதனால் மாயதுன்னைக்கும், சமோரினிக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்படல் மாயாதுன்னை தோல்வியுறல். |
| கி.பி 1543 | 7ஆம் புவனேகபாகு | அந்தோனி பரேன்ந்து | கோட்டையைத் தாக்குதல் | 1539 ஆம் ஆண்டின் பின்னர் சாமோரின் மாயாதுன்னைக்கு உதவிக்கு வராமை | மாயதுன்னை தோல்வியுறல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கி.பி 1557 | தர்மபாலன் | த லசர்தா | மன்னன் மாயதுன்னை | 1539 ற்குப் பின்னர் சாமோரின் மாயாதுன்னைக்கு உதவிக்கு வரவில்லை | மாயதுன்னை தோல்வியடைதல் போர்த்துக்கேயர் தோல்வியடைதல் |
| கி.பி 1562 முல்லேரியாப் போர் | தர்மபாலன் | | மாயா துன்னனையும் டிகிரி குமாரனும் | வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமை | |
| 1564 | தர்மபாலன் | | கொழும்பையும் கோட்டையும் ஒன்றாகத் தாக்குதல் | உள்நாட்டு உதவிகள் இன்மை | தலைநகர் கோட்டையில் இருந்து கொழும்புக்கு மாற்றப்படல் |

## தர்மபாலன்

புவனேகபாகுவின் மகளின் மகனான தர்மபாலனுக்குக் கோட்டை இராச்சிய உரிமையைக் கொடுப்பது புவனேகபாகுவின் விருப்பமாக இருந்தது. தனது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு மாயதுன்னை தடையாக இருப்பான் என்று நினைத்த புவனேகபாகு மன்னன் தர்மபால இளவரசனின் சிலை ஒன்றை வடித்து அதனை அன்பளிப்புக்கள், காணிக்கைகளுடன் போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பி வைத்தான்.

தனக்குப் பிறகு இலங்கை அரசின் உரிமையாளராக தர்மபால இளவரசனை ஏற்றுக் கொள்ளுமாறும் அரச உரிமையைப் பெற்றுக் கொள்வதில் அவனுக்கு உதவியாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டான்.

மேலும் போர்த்துக்கல் மன்னனை மகிழ்விப்பதற்காக இலங்கையில் கிறிஸ்தவ சமயத்தைப் போதிப்பதற்காக மிஷனரிமார் சிலரை அனுப்பி வைக்குமாறும் வேண்டி நின்றான்.

1543ம் ஆண்டு தர்மபால இளவரசனின் சிலைக்கு முடி சூட்டு விழா போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் மிகக் கோலாகலமாக நடந்தேறியது.

புவனேகபாகு மன்னனின் வேண்டுகோளின் பேரில் 1543ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் மிஷனரிமார் நான்கு பேர் இலங்கை வந்தனர். அரச அனுசரணையுடன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. நீர்கொழும்பு, முகத்துவாரம், மொரட்டுவ, பாணந்துறை, மக்கொன, பேருவல முதலிய பிரதேசங்களில் அதிகமாக மக்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினர்.

புவனேகபாகு கத்தோலிக்க சமயத்தைத் தழுவாததாலும் மாயாதுன்னையைக் காட்டிக் கொடுக்காததினாலும் போர்த்துக்கேயர் அவனுடன் மனத்தாங்கலுற்றனர்.

## ஏழாம் புவனேகபாகுவின் மரணம்

முதுமைப் பருவமடைந்த புவனேகபாகு மன்னன் ஓய்வெடுப்பதற்காக தனது களனி மாளிகைக்கு வந்தான். தனது தந்தையின் கொலை, முதற் கொண்டு எல்லா விடயங்களிலும் போர்த்துக்கேயரின் உதவியைப் பெறவேண்டியிருந்தமை என்பவற்றை எண்ணி அவன் கவலையடைந்தான். களனி மாளிகையின் மேல்மாடியில் மன்னன் உலாவும் வேளையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானான்.

கி.பி 1551ஆம் ஆண்டு புவனேகபாகு மன்னன் இறக்கும் போது அரச வாரிசான தர்மபால இளவரசன் சிறுவனாக இருந்த காரணத்தால் அவனது தந்தை வீதிய பண்டார அரச கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டான். மாயாதுன்னையுடனும் போர்த்துக்கேயருடனும் முரண்பட்ட வீதிய பண்டார பின்னர் யாழ்ப்பாணம் சென்று தலைமறைவானான். பிற்காலத்தில் ஏற்பட்ட கைகலப்பொன்றில் அவன் மரணமானான். வீதிய பண்டார இறந்தயைடுத்து தர்மபால இளவரசன் மன்னனானான்.

1557ஆம் ஆண்டு தர்மபால மன்னன் தொன் யுவான் (பெரிய பண்டார) எனும் பெயரில் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்றான்.

தமது மன்னன் கிறிஸ்தவனானதைப் பார்த்துப் பொறுக்க முடியாத பௌத்த பிக்குகளும், பௌத்த மக்களும் புனித தந்ததாதுவையும் எடுத்துக் கொண்டு சீதாவாக்கைக்குச் சென்றனர்.

மாயாதுன்னையும், டிகிரி குமாரனும் 1564இல் கொழும்புக் கோட்டையையும், கோட்டையையும் ஒரே முறையில் தாக்கினர். இரு இடங்களையும் ஏககாலத்தில் காப்பாற்ற முடியாது என்றுணர்ந்த போர்த்துக்கேயர், கோட்டையைக் கைவிட்டு தர்மபாலனைக் கூட்டிக் கொண்டு கொழும்புக் கோட்டைக்கு வந்துவிட்டனர்.

1565 இல் கோட்டை கைவிடப்பட்ட போது 150 ஆண்டுகளாகத் தலைநகராக விளங்கிய அவ்விடம் விரைவில் அழிவுறத் தொடங்கியது.

கொழும்புக்கு வந்த பின்னர் தர்மபால மன்னன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மை போலானான்.

கி.பி 1580 ஆகஸ்ட் 12 இல் தர்மபால மன்னன் போர்த்துக்கேயரின் நிர்ப்பந்தத்தால் கோட்டை இராச்சியத்தை அவர்களுக்குப் பரிசாக அளிப்பதாக உயில் (மரணசாசனம்) எழுதி வழங்கினான்.

இதில், தர்மபாலனுக்குக் குழந்தைகள் இல்லாத பட்சத்தில் இராச்சியம் போர்த்துக்கேயருக்கு உரியதாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தர்மபாலனுக்கு வாரிசு இன்மையாலும் கி.பி 1597 மே29ஆம் திகதியில் தர்மபால மன்னன் (பெரிய பண்டார) காலமானதாலும் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்கு உரிமையானது.

மன்னன் இறந்து இரண்டாவது நாளில் கெப்டன் ஜெனரலான ஜெரனிமோத அஸிவிடோ, மல்வானையில் அரச சபையைக் கூட்டி அதில் சிங்கள சம்பிரதாய சட்டதிட்டங்களுக்கு இயைபாக நாட்டை ஆள்வதாக வாக்குறுதியளித்தான். போர்த்துக்கேயக் கொடியை ஏற்றி, இராச்சியத்தை அவர்களது உரிமையாக்கினான். நடைமுறையிலுள்ள சம்பிரதாயங்களுக்கும், சட்டத்திட்டங்களுக்கும் இயைபாக ஆட்சியை நடத்துவதாக அஸ்விடோ மல்வானையில் கூடியிருந்த பிரதானிகளிடம் வாக்குறுதி அளித்தான். இதிலிருந்து போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் சட்டபூர்வ உரிமையாளர்கள் ஆயினர்.

**செயற்பாடு**

1. 'மாயாதுன்னையின் செயல்களால் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது' இல்லை "புவனேகபாகு மன்னனின் செயற்பாடுகளால் கோட்டை போர்த்துக்கேயர் வசமானது' என்ற தலைப்பில் விவாதம் நடாத்துக.
2. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு உரிய காரணங்களை விளக்கி, சுவர்ப்பத்திரிகை ஒன்று வரைக.
3. கோட்டை இராச்சியம் பிளவுபட்ட விதத்தை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக.

## போர்த்துக்கேயருக்கும் சீதாவாக்கை அரசுக்கும் இடையிலான தொடர்புகள்

கி.பி.1521 இல் நிகழ்ந்த ‘‘விஜயபாகு கொள்ளை” நிகழ்ச்சியால் சீதாவாக்கை என்றொரு அரசு உருவானது. இதன் முதலாவது மன்னன் வீரம் மிக்க மாயாதுன்னை ஆவான். இவன் கோட்டையையும் கைப்பற்றிக் கொள்வதற்குத் தருணம் பார்த்திருந்தான். ஆனால் கோட்டை மன்னனுக்கு போர்த்துக்கேயர் உதவி புரிதல், இதற்குத் தடையாக இருந்தது. போர்த்துக்கேயரை வெல்வதற்கு தம்மிடம் கடற்படை ஒன்றில்லாத குறையைப் போக்கக் கள்ளிக் கோட்டை மன்னன் சாமோரினின் உதவியைப் பெற்றான்.

## சீதாவாக்கையின் எழுச்சி

- ❋ கி.பி 1538 இல் நிகழ்ந்த றைகம பண்டாரனின் மரணத்தின் பின் றைகம இராச்சியத்தை தனதாக்கிக் கொண்டதன் மூலம் சீதாவாக்கை இராச்சியத்தை விஸ்தரித்துக் கொள்ள மாயாதுன்னையால் முடியுமாயிருந்தது.
- ❋ கி.பி 1527லிருந்து 1537வரை கோட்டையைக் கைப்பற்ற எடுத்த எத்தனங்கள் தோல்வியில் முடியவே, தனது கொள்கையை மாற்றிக் கொண்டு, புவனேகபாகுவுடன் சமாதானப்பட்டு, கூட்டொன்றை ஏற்படுத்திக் கொண்டான்.

**சீதாவாக்கையின் எழுச்சிக்கான காரணிகளாவன :**

- ✸ 1557இல் தர்மபால மன்னன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியமை.
- ✸ பௌத்த சமயத்தின் பாதுகாவலனாக குருமாரும் பொது மக்களும் மாயதுன்னையைக் கருதியமை.
- ✸ புனித தந்த தாதுவை கோட்டையிலிருந்து சீதாவாக்கைக்குப் பிக்குமார் கொண்டு வந்தமை.
- ✸ அரசின் உரிமைச் சின்னமான புனித தந்ததாது கிடைக்கப்பெற்றமையினால் தலைமைத்துவ மன்னனாக மாயாதுன்னை மதிக்கப்பட்டமை.
- ✸ மாயதுன்னையினதும், அவன் மகன் இராஜசிங்கனதும், திறமை.
- ✸ பெருந்தொகையான பௌத்த குருமாரும், மக்களும் கோட்டையை விட்டு சீதாவாக்கைக்குச் சென்றமை.
- ✸ புனித தந்ததாதுவை தெல்கமு விகாரையில் ஒரு திரிகைக் கல்லினுள் பாதுகாப்பாக வைத்து அதற்கு பூஜை செய்து வந்தமை.

மாயதுன்னை கொழும்பு தவிர்ந்த கோட்டை இராச்சியத்தின் ஏனைய பகுதிகள் முழுவதினதும் அதிபதியானான். அதன்படி கோட்டை, சீதாவாக்கை, றைகம, தெனவக்க, ஏழுகோறளை என்பன அவனது ஆட்சிக்கு உட்பட்டன. கி.பி1521ஆம் ஆண்டு சிறிய பிரதேசமொன்றில் ஆரம்பமான சீதாவாக்கை கி.பி 1579ஆம் ஆண்டளவில் நாட்டின் முக்கிய இராச்சியமாக விளங்கியது.

## முல்லேரியாப் போர் - கி.பி 1562

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்ற வேண்டுமென உறுதியுடன் செயற்பட்ட மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொண்ட போர்களில் மாயதுன்னையின் மகன் டிகிரி பண்டார முன் நின்றான். அவனின் எழுச்சியைக் கண்டு சகிக்காத போர்த்துக்கேயர், சீதாவாக்கையை ஆக்கிரமிக்கும் பொருட்டு கி.பி1562இல் தலசர்தாவின் தலைமையில் படையொன்றை அனுப்பியதோடு, நேருக்கு நேர், இரு படைகளும் கடுமையாக மோதின. இதில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்தனர். அக்காலத்தில் போர்த்துக்யேர் அடைந்த மிக மோசமான தோல்வி இதுவாகும்.

## முதலாம் இராஜசிங்கன்

கி.பி 1581ம் ஆண்டு மாயாதுன்னை இறந்தான். மாயாதுன்னையின் மரணத்தின் பின்னர் டிக்கிரி பண்டார, இராஜசிங்கன் என்ற பெயரில் சீதாவாக்கையின் அரசனானான். சிறு வயது முதல் போரில் திறமையுடைய இவனது நோக்கம் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதாகும்.

## கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல்

1582ம் ஆண்டு முதலாம் இராஜசிங்க மன்னனால் கண்டி இராச்சியம் கைப்பற்றபட்டமையானது சீதாவக்கை இராச்சிய எழுச்சியின் உச்சக்கட்டமாகும்.

## கொழும்பு கோட்டையை முற்றுகையிடல்

ஐயாயிரம் பேர் கொண்ட படையுடன் கி.பி 1587இல் முதலாம் இராஜசிங்கன் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டான். 22 மாதங்கள் போர்த்துக்கேயரை கோட்டையினுள் வைத்திருக்க அவனால் முடிந்தது. கோட்டையினுள் இருந்த போர்த்துக்கேயர் உணவுப் பற்றாக்குறையால் மிகவும் அல்லலுற்றனர். போர்த்துக்கேயருக்குக் கோவாவிலிருந்து படையுதவி கிடைத்ததும் அவர்கள் மீண்டும் பலமடைந்தனர். இதனால் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றும் இராஜசிங்கனின் முயற்சி தோல்வியடைந்தது.


## சீதாவாக்கையின் வீழ்ச்சி

மலையகத்திற்கு 1ம் விமலதர்மசூரியன் அரசனானதுடன் சீதாவாக்கை இராஜசிங்கனுக்கு இவ்விராச்சியத்திலிருந்து எதிர்ப்புகள் உருவாகின. இராஜசிங்கன் கி.பி 1592ல் முதலாம் விமலதர்மசூரியனிடம் தோல்வியுற்றமை பற்றி முதலாம் அலகில் கற்றிருப்பீர்கள்.

ஆழ்ந்த ஈடுபாட்டுடனும் அதீத பிரயத்தனத்துடனும் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தமையினால் முதலாம் ராஜசிங்கன் கவலையடைந்தான். இதனால் சகிக்க முடியாத கோபமும் கொடூரமான செயற்பாடுகளும் அவனை ஆட்கொண்டன.

சைவ சமயத்தைத் தழுவிய அவன், பௌத்த விரோத கொள்கையைக் கையாளத் தொடங்கினான். தனக்கு எதிரானவர்கள் என்று அவன் கருதிய அனைவரையும் எவ்வித விசாரணைகளும் இன்றிக் கொன்றொழித்தான்.

அரசனின் கொடூர நடவடிக்கைக்கு எதிராக மலைநாட்டில் கலவரம் ஒன்று மூண்டது. இச்சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் தம்மிடம் தஞ்சமடைந்திருந்த மலைநாட்டின் சட்டபூர்வ ஆட்சி உரிமையாளனான டொன் பிலிப் (யமசிங்க பண்டார) இளவரசனை டொன் ஜுவானுடன் (கோணப்பு பண்டாரா) மலை நாட்டிற்கு அனுப்பினர்.




பெதன்கொட பூங்காவிலுள்ள முள் மூங்கில் புதர்

மலையக மக்கள் டொன் பிலிப்பை ஆதரித்ததோடு, கி.பி 1592 இல் கனேதென்னை என்னும் இடத்தில் முதலாம் இராஜசிங்க மன்னனின் படைக்கும் கோணப்பு பண்டாரனின் படைக்கும் இடையே நடந்த சண்டையில் முதலாம் இராஜசிங்கனின் படை தோல்வியுற்றது.

தோல்வியுற்ற மன்னன் திரும்பி வருகையில் பெதன்கொட பூங்காவில் மூங்கில் முள் ஒன்று பாதத்தில் தைத்தமையால் ஏற்பட்ட காயத்தால் மரணமடைந்தான்.

முதலாம் இராஜசிங்க மன்னனின் மரணத்தைத் தொடர்ந்து சீதாவாக்கை சிம்மாசனத்திற்கு உரிமையாளன் ஒருவன் இன்மையால், பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் போர்த்துக்கேயர் சீதாவாக்கையிலிருந்த பெறுமதிமிக்க சொத்துக்களைக் கொள்ளையிட்ட பின் சீதாவாக்கையை தமது காவல்நிலையமாகப் பயன்படுத்தினர்.




போர்த்துக்கேயரின் காவல்நிலையமாக மாற்றப்பட்ட சீதாவாக்கை நகர்

**செயற்பாடு**

1. சீதாவாக்கையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணங்களை பட்டியற்படுத்துக
2. ''இராஜசிங்க மன்னனிடம் ஒரு கடற்படை இருந்திருந்தால் நிச்சயமாக போர்த்துக்கேயரைத் தோற்கடித்திருப்பான்'' இதற்கு ஆதரவாகவோ எதிராகவோ காரணங்களை முன்வைக்குக.
3. முதலாம் இராஜசிங்கனின் காலில் முள் குத்தியது பற்றிக் கூறப்படும் கதையை எழுதுக.
4. பெரண்டிக் கோயில் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

## போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள்

- கோட்டை, சீதாவாக்கை ஆகிய இராசதானிகளினால் ஏற்பட்ட சவால்களை எதிர்நோக்கும் பொருட்டுக் கண்டி அரசர்கள் போர்த்துக்கேயரின் உதவியை நாடி வந்தனர்.
- கி.பி 1546ல் மாயதுன்னையும், 7ஆம் புவனேகபாகுவும் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்ததால் இரண்டாம் ஜயவீர பண்டார போர்த்துக்கேயரின் உதவியை நாடியமை அதன் ஒரு சந்தர்ப்பமாகும்.

## தந்துரே போர் - கி.பி 1594

(முதலாம் விமலதர்ம சூரிய மன்னனைப் பற்றி முதலாம் அத்தியாயத்தில் கற்றுள்ளோம்.) போர்த்துக்கேயர் முதலாம் விமலதர்மசூரிய மன்னன் ஆட்சி பீடமேறிய பின்னரே கண்டி இராச்சியத்துடன் அடிக்கடி போர்த் தொடர்புகளை மேற்கொண்டானர்.

கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய விமலதர்மசூரியன் அதனை விட்டு விலகி மீண்டும் புத்த சமயத்தைத் தழுவிக்கொண்டான். இந்தச் செயல் போர்த்துக்கேயருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. தங்களின் கீழ் வளர்ந்து, யுத்த தந்திரங்களைக் கற்று வீரனாகத் திகழ்ந்த விமலதர்மசூரியனின் செயலைப் போர்த்துக்கேயர் துரோகச் செயலாகக் கருதினர். அரசனைத் தண்டிக்கும் பொருட்டுக் தோனா கத்தரினாவைக் கண்டி இராச்சியத்தின் அரசியாக்கும் நோக்குடன் பேரோ லோபேஸ் த சூசாவின் தலைமையில் கண்டி இராச்சியத்திற்குப் படையொன்று அனுப்பப்பட்டது. விமலதர்மசூரியன் தப்பிச் சென்றதுடன், தோனா கதரீனாவுடன் கண்டி இராச்சியத்தின் அரசியாக்கப்பட்டாள். அரசியின் மூலம் போர்த்துக்கேயர் தம் அதிகாரத்தைக் கண்டியில் நிலைநாட்ட முயன்றமைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே சூசா தோனா கத்தரினாவுடன் கொழும்பை நோக்கிப் புறப்பட்டான்.

மக்களின் துணையுடன் விமலதர்மசூரியன் தந்துரே எனும் இடத்தில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான். சூசாவும் கொல்லப்பட்டான். விமலதர்ம சூரிய மன்னன் தோனாகத்தரினா இளவரசியைத் திருமணம் செய்து தனது ஆட்சி உரிமையை உறுதிப் படுத்திக்கொண்டான்.

## பலன போர் - கி.பி 1602

தந்துரே போரில் படுதோல்வி அடைந்த போர்த்துக்கேயர் கி.பி 1602ல் கப்பித்தான் ஜெனரல் தொன் ஜெரனிமோ டி அசிவிடோவின் தலைமையில் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். எதிர்த்தாக்குதல் நடாத்திய விமலதர்ம சூரியன் 'பலன' என்ற இடத்தில் மீண்டும் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான்.

## அசிவிடோ இரண்டாவது முறையாகக் கண்டியை ஆக்கிரமித்தல்

கி.பி 1610இல் இரண்டாம் முறையாக அசிவிடோ கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தான். அப்போது அரசனாக இருந்த செனரத் மன்னன் பின்வாங்கவே அசிவிடோ கண்டி நகரைச் சூறையாடி தீ வைத்து விட்டுக் கரையோரப் பிரதேசத்தை அடைந்தான். கி.பி 1617ல் செனரத் மன்னன் போர்த்துக்கேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டான்.

கி.பி 1617ல் மன்னன் செனரத்திற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை.

- போர்த்துக்கேயருக்குக் கப்பமாக ஆண்டொன்றுக்கு இரண்டு யானைகள் வழங்குதல்.
- கோட்டை இராச்சியம் முழுவதற்கும் போர்த்துக்கேயரே உரிமையாளர் என்பதைக் கண்டி அரசன் ஏற்றுக்கொள்ளல்.

அரசன் போர்த்துக்கேயருடன் உடன்படிக்கை செய்துக் கொண்டதால் கண்டி மக்கள் அதிருப்தியடைந்தனர். இந்த உடன்படிக்கை செயற்படவில்லை.

## கொன்ஸ்தாந்தின் டி சா கண்டியை ஆக்கிரமிக்க ஆயத்தமாதல்.

1618ல் கப்பித்தான் ஜெனரலாக நியமனம் பெற்ற கொன்ஸ்தாந்தின் டிசா என்பவன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதின் அவசியத்தை உணர்ந்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தான். அவன் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

1. போர்த்துக்கேயரின் கீழிருந்த கோட்டைகளை சீர்திருத்தல், அதன் பொருட்டு கொழும்புக் கோட்டைக்குப் புதிய மதில்களை அமைத்தலும், பீரங்கிகளைப் பொருத்துதலும், காலி மெனிக்கடவர கோட்டைகளை சீர்திருத்தஞ் செய்தல்.
2. புதிய கோட்டைகளை அமைத்தல்.
   - 1623 திருகோணமலை
   - 1628 மட்டக்களப்பு
3. பேரே வாவிக்கு அண்மையில் வெடிமருந்துத் தொழிற்சாலையொன்று அமைத்தல்.
4. கி.பி 1625ல் வத்தளை, மோதரை (முகத்துவாரம்) என்பவற்றுக்கு அருகில் குடியேற்றங்களை அமைத்தல்.
5. லஸ்கரின் படையினர் போர்த்துக்கேயரை விட்டுப் பிரிந்தால் அவர்களது மனைவி, பிள்ளைகளுக்கு தண்டனை வழங்குவதாக அறிவித்தல்.

லஸ்கரின் படை என்பது போர்த்தக்கேயரின் கீழ் கூலிக்குப் பணியாற்றிய சுதேசிகளைக் கொண்ட படையாகும்.

போர்த்துக்கேயர் கோட்டைகளை அமைப்பதற்குக் கண்டி இராச்சிய மன்னன் எதிர்ப்புத் தெரிவித்தான். அரசன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொள்வதையிட்டு போர்த்துக்கேயர் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## ரந்தெனிவெலப் போர் - கி.பி 1630

கரையோரப் பிரதேசத்தில் தம் நிலையை உறுதி செய்த பின்னர் த சா 1630ல் கண்டி இராச்சியத்தின்மீது படையெடுத்தான். ரந்தெனிவெல எனும் இடத்தில் மன்னன் செனரத்தினதும் அவனது மகனான 2 ஆம் இராஜசிங்கனதும் படைகள் கொன்ஸ்தாந்தின் த சாவின் படையை முற்றாக முறியடித்தன. த சா போரில் கொல்லப்பட்டான்.

## கன்னொறுவப் போர் - கி.பி 1638

போர்த்துக்கேயர் கி.பி 1638ல் தியோகா த மெலோ கஸ்ரோவின் தலைமையில் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். கன்னொறுவவில் ஏற்பட்ட போரில் போர்த்துக்கேயர் தோல்வியடைந்ததுடன் தியோகோ த மெலோ கொல்லப்பட்டான். இதுவே போர்த்துக்கேயர் கண்டிமீது மேற்கொண்ட இறுதிப் போராகும்.

### செயற்பாடு

1. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் ‘‘சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திய பெரு வீரனாவான்’’ உதாரணங்கள் தந்து இதனை நிறுவுக.
2. போர்த்துக்கேயர் மலையகத்தைக் கைப்பற்ற முயற்சித்ததற்கான காரணங்கள் யாவை?
3. லஸ்கரின் படையில் இடம்பெற்றிருந்தோர் யாவர்?
4. போர்த்துக்கேயரால் மலையகத்தை வெற்றி கொள்ள இயலாமற் போனமைக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

| வருடம் | போர்த்துக்கேயத் தளபதி | மன்னன் | போரின் பெயர் |
|---|---|---|---|
| | | 1ம் விமலதர்ம சூரியன் | |
| | | | |
| | கொன்ஸ்தாந்தைன் த சா | | |
| 1638 | | | |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.

## போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசுடன் கொண்டிருந்த தொடர்புகள்

1505இல் போர்த்துக்கேயர் இந்நாட்டுக்கு வருகையில் யாழ்ப்பாணத்தில் பரராஜசேகரம் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

கறுவா, மிளகு போன்ற வாசனைத்திரவியங்கள் அங்கு கிடைக்கப்பெறாமையால் யாழப்பாணத்தின் மீது போர்த்துக்கேயரின் கவனஞ் செல்லவில்லை. யாழ்ப்பாண இராச்சிய உள்நாட்டுப் பிரச்சினைகளால் போர்த்துக்கேயர் அங்கு தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

போர்த்துகேயர் யாழ்ப்பாணத்தில் தலையீடு செய்தமைக்கான காரணங்களாவன

1. யாழ்ப்பாணத்துக்கூடாக இந்தியாவுடன் தடையின்றி, வர்த்தகம் செய்தலும், யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கச் சமயத்தை பரப்பும் நோக்கமும்.
2. கி.பி 1519இல் சங்கிலி என்பவன் பரராஜசேகர மன்னனைக் கொன்று சிம்மாசனத்தைக் கவர்ந்து கொண்டான். அச்சமுற்ற பரராஜசேகரனின் மகன் இந்தியாவுக்குத் தப்பியோடி, தனது அரசுரிமையை மீட்டுக் கொள்வதற்காக போர்த்துக்கேயரின் உதவியை நாடியமை.

இவ்விரு காரணிகளையும் முன்வைத்து, சங்கிலி மன்னனைத் தாக்குவதற்காக கி.பி 1543இல் மாட்டின் அபோன்சு த சூஸா தலைமையில் பெரும் படை ஒன்று யாழ்ப்பாணத்திற்குச் சென்றது. ஆனால் சங்கிலி மன்னன் தந்திரமான முறையில் போர்த்துக்கேயருடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டான். அதன்படி

- போர்த்துக்கேயருக்கு 500 பகார் பணத்தையும் இரண்டு யானைகளையும் வருடாந்தம் வழங்குதல்.
- யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு அனுமதியளித்தல்.

தம்முடைய எதிர்பார்ப்பு பிரச்சினையின்றிக் கிட்டவே மகிழ்ச்சியடைந்த போர்த்துக்கேய குருமார் கத்தோலிக்க மதப் பிரசாரத்தை மன்னாரில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் வரை மேற்கொண்டு பரப்பினர். இந்து சமயத்தவர்கள் வேகமாக கத்தோலிக்க சமயத்தில் சேர்வதை இந்து சமய குருமார்கள் கடுமையாக எதிர்த்தனர். கத்தோலிக்கத்தைத் தழுவியோர் எதிர்காலத்தில் தமக்கு எதிராகவும் போர்த்துக்கேயருக்கு ஆதரவாகவும் செயற்படுபவர் என சங்கிலி மன்னனும் அச்சமடைந்தான். கத்தோலிக்கத்தைத் தழுவியோரை மீளவும் இந்து சமயத்துக்கு வரும்படியும் இல்லையேல் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் எச்சரித்தான்.

## பிரகன்சாவின் யாழ்ப்பாண விஜயம்

சங்கிலி மன்னனின் துரோகச் செயலுக்குத் தண்டனை வழங்குவதற்காக கி.பி 1560இல் பிரகன்ஸாவின் தலைமையில் படையொன்று யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றது. நல்லூரை அடைந்த படையினரை மக்கள் தாக்கத் தொடங்கினர். சங்கிலி மன்னன் நல்லூர் மாளிகைக்குத் தீயிட்டுவிட்டு கோப்பாய்க்குத் தப்பியோடினான். நல்லூரைக் கைப்பற்றிய பின்னர் கோப்பாயையும் போர்த்துக்கேயர் கைப்பற்றிக் கொண்டனர். அங்கிருந்தும் மன்னன் தப்பியோடவே பிரகன்சா கோப்பாயில் தனது காரியாலத்தை நிறுவிக் கொண்டான்.

மீளவும் தமது இராச்சியத்தைத் தந்துதவுமாறு சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை வேண்டினான். அப்படிச் செய்தால் முன்னைய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதாகவும், பிணையாகத் தனது புதல்வனை போர்த்துக்கேயர் வசம் ஒப்படைப்பதாகவும் கூறினான். அதனை ஏற்றுக்கொண்ட கோவாவிலிருந்த இராஜப் பிரதிநிதி, மீளவும் சங்கிலியிடம் இராச்சியத்தை ஒப்படைத்தான்.

தமது பாதுகாப்பின் பொருட்டு போர்த்துக்கேயர் மன்னாரில் கோட்டை ஒன்றை அமைத்தனர். சங்கிலி மன்னனால் துன்பத்திற்குள்ளான யாழ்ப்பாண மக்கள் அவனை ஆட்சிப்பீடத்திலிருந்து அகற்றினர்.

- அதன் பின்னர் அரசனான பெரிய பிள்ளை எனும் செகராசசேகரன் போர்த்துக்கேயருக்கு சார்பாக இருந்ததை மக்கள் விரும்பவில்லை. மக்கள் கலகம் விளைவித்து அவனையும் ஆட்சிப்பீடத்திலிருந்து அகற்றினர். இக்கலவரத்தின் போது செகராசசேகரத்தின் இளைய மகனைக் கொலை செய்வதற்கு எடுத்த முயற்சியை பிங்ஙாவோ எனும் போர்த்துக்கேய வீரன் தடுத்து, அவனைக் காப்பாற்றினான். இந்தச் சம்பவம் இரத்தினபுரி மகா சமன் தேவாலயத்தில் கல்லொன்றில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.



இரத்தினபுரி சமன் தேவாலயத்தில் காணப்படும் சித்திரமொன்று (போர்த்துக்கேய வீரனால் யாழ்ப்பாண இளவரசன் காப்பாற்றப்படல்)

- இந்தக் கலவரத்தின் பின்னர் அரசனான சங்கிலி மன்னனின் மகனான புவிராச பண்டாரம்

போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டான். இவன் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயரை விரட்டுவதற்குப் படையொன்றை அனுப்பினான்.

- புவிராச பண்டாரத்தின் செயலை முறியடிக்கும் பொருட்டு பர்னாதோ மெடொன்சாவின் பெரும் படையொன்று மன்னாருக்கு அனுப்பபட்டது. நல்லூருக்கு வந்த மெடொன்சா புவிராச பண்டாரனைக் கொன்றான். மேலும் கி.பி 1591ல் நல்லூர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

- உடன்படிக்கையின் படி யாழ்ப்பாண மன்னனாக போர்த்துக்கல் மன்னன் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

- பெரிய பிள்ளையின் மகனான பரராசசேகரன் எனும் எதிர்மன்ன சிங்கம் போர்த்துக்கல் மன்னனின் பெயரால் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாள னாக்கப்பட்டான். தன்னை மரணத்திலிருந்து காப்பாற்றியதாலும், யாழ்ப்பாண ஆட்சியாளனாகத் தன்னை நியமித்ததாலும் அவன் போர்த்துக்கேயருக்கு மிகவும் சார்பாக இருந்தான்.

- எதிர்மன்னசிங்கன் கி.பி 1615ல் இறந்ததும், இரண்டாம் சங்கிலி அரசனானான். போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்றப்பட்ட இம்மன்னன் அதுவரை யாழ்ப்பாண மன்னர்களால் போர்த்துக்கேயருக்கு செலுத்தப்பட்டு வந்த திறையை செலுத்த மறுத்ததோடு, போர்த்துக்கேயருக்கு எதிராக ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டான்.

## போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல்

சங்கிலி மன்னனின் செயலை அடக்கும்பொருட்டு இராசப் பிரதிநிதி கொன்ஸ்தாந்தி டி சாவால் பிலிப் த ஒலிவேராவின் தலைமையில் பலம் வாய்ந்த படையொன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. கி.பி 1619ல் சங்கிலி கைது செய்யப்பட்டு கோவாவிற்கு அனுப்பப்பட்டான். பின்னர் அங்கு அவன் கொலை செய்யப்பட்டான். அத்தோடு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.


**செயற்பாடு**

1. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிக்குக.
2. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் யாவை?
3. இலங்கைப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக. மன்னார், கோப்பாய், நல்லூர், ஊர்காவற்றுறை
4. யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு அங்கு நிலவிய ‘‘ஒற்றுமையின்மையே காரணம்’’ விளக்குக.

## போர்த்துக்கேயரின் கீழ் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் அரசியல், பொருளியல், சமூக, கலாசார நடவடிக்கைகள்

### நிர்வாகம்

போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது மூன்று இராச்சியங்களுள்ளும் கோட்டையே தலைமைத் தானத்தில் இருந்தது. இது நான்கு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.





கி.பி.1597இல் கோட்டை இராச்சியத்தைக் கையேற்ற போர்த்துக்கேய தளபதியான டொன் ஜெரனிமோ அஸவேது மல்வானை ஒப்பந்தத்தில், சிங்கள சம்பிரதாயப்படி மரபுகளைப் பேணி ஆள்வதாக உடன்பட்டான்.

இதற்கமைய இருந்து வந்த நிர்வாகத்தை அப்படியே போர்த்துக்கேயரும் தொடர்ந்தனர்.


இலவச விநியோகத்திற்காக

## போர்த்துக்கேய ஆட்சியின் விசேட பண்புகள்

1. இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த கரையோரப் பிரதேசத்தின் தலைமை ஆட்சியாளராக இருந்தது போர்த்துக்கல் மன்னனாவான். அவனது ஆணையை செயற்படுத்த இந்தியாவில் கோவா என்ற இடத்தில் மத்திய நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு ஆட்சியாளராகச் செயற்பட்டவர் இராசப்பிரதிநிதி எனப்பட்டார். அவரின் கீழ் இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களுக்குப் பொறுப்பாக கப்பித்தான் ஜெனரல் செயற்பட்டார். அதன்படி இலங்கையில் போர்த்துக்கேய ஆட்சி நிலவிய பகுதிகளுக்குக் தலைவராக இருந்தவர் கப்பித்தான் ஜெனரல் ஆவார் அவருக்கு உதவியாக அதிகாரிகள் இருந்தனர்.




2. கப்பித்தான் ஜெனரலின் கீழ் இருந்த பிரதேசங்கள் சுதேச முறைப்படி பிரதேச ஆட்சி அலகுகளாக அதிகாரிகளின் கீழ் இயங்கின.

3. விக்கார் ஜெனரல் என அழைக்கப்பட்ட குருவானவர் சமய சம்பந்தமான விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்தார்.

4. ''சென் லோரன்ஸ் நகர்'' எனும் பெயரால் குறிப்பிடப்பட்ட கொழும்பு நகரம் நகர சபையால் நிர்வகிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ✸ | திஸாவனி | - | திஸாவை |
| ✸ | ரட | - | ரடே மஹத்தய |
| ✸ | கோரளை | - | கோரளை |
| ✸ | பற்று | - | அத்துக்கோரளை |
| ✸ | கிராமம் | - | கிராமத்தலைவன் |

## வர்த்தகம்

கீழை நாட்டுக்குப் போர்த்துக்கேயர் வந்தது வர்த்தகத்தை மேற்கொள்வதற்காகவே ஆகும். வர்த்தக நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தினர்.

- ✸ கறுவா வர்த்தக உரிமையை முழுமையாக அரசுக்குரியதாக்கினர். இதற்காக ''மஹபத்தே கெப்டன்''என்பவன் பொறுப்பாக இருந்தான். கறுவா சேகரிப்பிற்காக ''மஹாபத்த'' எனும் திணைக்களம் அமைக்கப்பட்டது.
- ✸ மிளகு, பாக்கு என்பவற்றை அரசாங்கத்துக்கு மட்டுமே விற்க வேண்டும்.
- ✸ யானை, மாணிக்கம் என்பவற்றை அரசாங்கமே ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இவற்றால் போர்த்துக்கேயர் பெருந்தொகையை சம்பாதித்துக் கொள்ளக்கூடியதாய் இருந்தது.

## கத்தோலிக்க சமயம்

போர்த்துக்கேயரது வருகையின் அடுத்த நோக்கம் சமயத்தைப் பரப்புவதாகும். எனவே இவ்விடயத்தில் கூடியளவு கவனஞ் செலுத்த வேண்டும்.

1. கி.பி.1543இல் தர்மபால இளவரசனின் சிலைக்கு முடிசூட்டுவதற்காக லிஸ்பனுக்கு எடுத்துச் சென்ற குழு, திரும்பி வருகையில் பிரான்ஸிஸ்கன் சபையைச் சார்ந்த குருமார்கள் நால்வர் அவர்களுடன் வந்தமை, இலங்கையில் சமயத்தைப் பரப்புவதில் ஆரம்ப நடவடிக்கையாக அமைந்தது. ஏழாம் புவனேகபாகுவின் அழைப்பை ஏற்று இங்கு வந்த இக்குருமார், கரையோரப் பிரதேசங்களில் தமது சமயத்தை வெளிப்படையாகப் பிரசாரம் செய்யத் தொடங்கினர்.
2. அடுத்து இங்கு வந்த டொமினிக்கன், யேசு சபைக் குருமாரின் நடவடிக்கைகளால் மேலும் சமயம் பரவத் தொடங்கியதுடன் கடற்கரைப் பிரதேசங்களில் பல கத்தோலிக்க தேவாலயங்கள் கட்டப்பட்டன.

3. கி.பி.1557இல் தர்மபால மன்னன் கத்தோலிக்கனாக ஞானஸ்தானம் பெற்றதைத் தொடர்ந்து, பலர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். இம்மன்னன் பௌத்த, இந்து கோவில்களின் நிலபுலன்களை கத்தோலிக்க தேவாலயங்களுக்கு வழங்கினான். குருமார்கள் வாழ்வதற்காக போதிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தான்.

4. யாழ்ப்பாண மன்னர்கள் சிலரின் உதவியுடன் அப்பிரதேசம் எங்கும் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டது.

5. மிஷனரி (மறை பரப்பாளர்)மாரின் அயராத சேவையால் அச்சமயம் மேலும் பரவியது. அவர்கள் சிங்கள, தமிழ் மொழிகளைக் கற்று, மக்களுடன் நெருங்கிப் பழகி நோய்களாலும், துன்பத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உபகாரங்களைப் புரிந்து அவர்களது மனங்களைக் கவர்ந்தமையினால் சமயம் மென்மேலும் பரவியது.

6. அரச பதவி, பட்டங்கள், வரிவிலக்கு என்பவற்றை வழங்குவதன் மூலமும் தமது சமயத்திற்கு மக்களை ஈர்த்தனர். கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களிடமிருந்து மரண வரி அறவிடப்படுவதில்லை.

7. கத்தோலிக்கத்தை தழுவிய தாழ் குலத்தவர்களுக்கு சாதியைக் கவனத்தில் கொள்ளாது பதவி, பட்டங்களை வழங்குவதன் மூலமும் சமய பரம்பலுக்கு வழியேற்படுத்தினர்.

8. கத்தோலிக்க சமயம் சார்ந்த விழாக்கள் மக்களின் மனதைக் கவரும் வண்ணம் காணப்பட்டமையும் இதற்குப் பங்களித்தன.

9. தேவாலயங்களுடன் இணைந்து இயங்கிய கோவில் மற்றும் பாடசாலைகளில் வழங்கப்பட்ட கல்வியாலும் சமயக்கருத்துக்கள் மனதில் பதிக்கப்பட்டன.

10. நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் மூலமும் தமது சமய கருத்துக்களை இலகுவாகப் பரப்பினர்.

போர்த்துக்கேயர் இலங்கையை விட்டுச் செல்கையில் கணிசமான தொகையினர் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றி வந்தனர்.

**மரணவரி**

போர்த்துக்கேயரது அதிகார வரம்பிற்குள் வாழ்ந்த ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவருடைய சொத்துக்கள் யாவும் அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே மரண வரியாகும். கத்தோலிக்கர் இதிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

## கல்வி

கோவிலுக்கருகில் சமயப்பற்றுப் (பரிஸ்) பாடசாலைகளை ஆரம்பித்து கல்வியை வளர்த்தனர். இங்கு சமயக் கல்வியுடன், கணிதம், லத்தீன் மொழி, இசை என்பவற்றையும் கற்பித்தனர். இங்கு சுய மொழிகளில் கற்பித்தலை மேற்கொண்டனர். ஆசிரிய, மாணவ தொகை வேகமாக அதிகரித்து வந்தது. இதனால் ஆசிரிய பயிற்சிக்கென கலாசாலைகளையும் தொடங்கினர்.

## வைத்தியம்

மேலைநாட்டு வைத்திய முறைப்படி சிகிச்சை அளிப்பதற்காக வைத்தியசாலைகளையும் ஆரம்பித்தனர். கி.பி1552ல் நோயாளர்களைப் பராமரிப்பதற்குப் பயிற்சி வழங்குவதற்காக வைத்தியசாலையொன்று கட்டப்பட்டது. இது ''எஸ்பிரிடல்'' என அழைக்கப்பட்டது. இதிலிருந்தே ஸ்பிரிதால (சிங்களத்தில் வைத்தியசாலை) எனும் சொல் உருவாகியது. ஒலிவேராவினால் யாழ்ப்பாணத்திலும் ஜோசப் வாஸ் அடிகளாரால் மன்னாரிலும் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலைகள் பெருமளவுக்கு படையினரின் தேவைக்காகவே பயன்படுத்தப்பட்டன.

## மடம் (மிஸரி கோசியா)

கோவில்களுடன் சேர்ந்த சமூக சேவைப் பிரிவாக இதனைக் குறிப்பிடலாம். ஏழைகளைப் பரிபாலிப்பது, அநாதைகளுக்குக் கற்பிப்பது, இறந்தவர்களைப் புதைப்பது என்பன மடத்தின் மூலம் ஆற்றப்பட்ட பணிகளாகும். கொழும்பு, காலி, மன்னார், யாழ்ப்பாணம் எனும் இடங்களில் இத்தகைய மடங்களைக் காணமுடியும்.

## இலக்கியம்

- ஒரு கதையை நாடகமாக நடித்துக் காண்பித்து அதனை அவர்களது மனதில் பதித்து அதன் ஊடாக மனதைக் கவர்ந்து அதன் மூலம் தெய்வ பக்தி வளர்க்கப்பட்டது. இந்த நாடகங்கள் மக்கள் மனதை கவர்ந்ததுடன் பக்தியை ஏற்படுத்தவும் உதவியது.

* சமய குருமார் இருவர் சிங்கள இலக்கணத்தைப் போர்த்துக்கேய மொழியில் எழுதியுள்ளனர். கொன்ஸ்தாந்தைன் த சாவின் யுத்தத்தைப் பற்றி வர்ணித்து எழுதப்பட்ட அழகிய வண்ண முகவெடி என்பவரின் கவிதை குறிப்பிடத்தக்கதொன்றாகும். மேலும் இறைதர்மம் பற்றி தமிழ் மொழியிலும் நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

* இலக்கியத்துறையில் சங்கீதம் முக்கியம் பெற்றது. இன்னும் கூட ஜனரஞ்சகமாக உள்ள பைலா, கபிறிஞ்ஞா என்பன பிரதானமானவை.

போர்த்துக்கேயர் காலத்திலேயே திருமணங்களை முறைப்படி பதியும் சட்டபூர்வமான முறை ஆரம்பமானது. இதனால் சட்டபூர்வமான திருமண பந்தங்களுக்கு வழி கோலினர். இதே போன்று நிலங்களைப் பதியும் முறையும் இவர்களாளேயே ஏற்படுத்தப்பட்டது. இவை “தோம்பு” எனப்பட்டது.

போர்த்துக்கேயரின் வருகையால் ஏற்பட்ட விளைவுகள் பலவும் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| ♦ **இசை** | - | **பைலா, கபிறிஞ்ஞா** |
| ♦ **தளபாடம்** | - | **அலுமாரி, கணப்பு** |
| ♦ **ஆடை** | - | **கமிஸ, களிசன், சாயா, கம்பாயம்** |
| ♦ **உணவு** | - | **பாண், வைன், சலாது, அச்சாறு, பஸ்தோல்** |
| ♦ **பெயர்கள்** | - | **ஜோன், சில்வா, பெரேரா, மென்டீஸ், அல்மேதா, வாஸ்.** |
| ♦ **கலைகள்** | - | **கட்டடம், சிற்பம், சித்திரம், நாடகம்** |

கி.பி 1505ல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களை தம்மடிப்படுத்தி கி.பி 1658வரை ஆட்சி செய்தனர். கண்டி அரசர்களும், ஒல்லாந்தரும் இணைந்து அவர்களை இந்நாட்டிலிருந்து அகற்றினர்.

## செயற்பாடு

போர்த்துக்கேயரின் ஆட்சியின் விளைவுகள் தொடர்பாக சுவர்ப்பத்திரிகை ஒன்று தயாரிக்குக.

## சாராம்சம்

- போர்த்துக்கேயரின் இலங்கை வருகை தொடர்பாக அத்தியாயத்தின் மூலம் கீழ்க்காணும் தகவல்களை அறியலாம்.
- மேல் நாட்டவர் கீழ் நாடுகளின் மீது கவனம் செலுத்துதல்.
- போர்த்துக்கேயர் கி.பி.1505ம் ஆண்டு இலங்கைக்கு வருதல்.
- அப்போது முக்கிய அரசாக இருந்த கோட்டை இராச்சியத்துடன் தொடர்பினை ஏற்படுத்துதல்.
- மன்னன் தர்மபாலனின் மரணத்துடன் போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் உரிமையாளராகுதல்.
- பல வழிகளிலும் போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முயன்று தோல்வியடைதல்.
- கி.பி.1658ல் போர்த்துக்கேயர் இந்நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படல்.
- போர்த்துக்கேயர் விட்டுச் சென்றவைகள் இன்றைய நம் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை.